## தூத்துக்குடி வடக்கு மாவட்டத்தில்

# ஓரணியில் தமிழ்நாடு மாபெரும் பொதுக்கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் கீதா ஜீவன் அறிக்கை!

தூத்துக்குடி, ஜூலை 2-

தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க செயலாளர் பி.கீதாஜீவன் அறிக்கை வருமாறு:-



கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க "ஓரணியில் தமிழ்நாடு" என்ற தலைப்பில் பொதுக்கூட்டம் இன்று 02.07.2025 புதன் கிழமை அன்று மாலை 5 மணியளவில் தூத்துக்குடி V.V.D சிக்னல் பகுதியில் உள்ள சிதம்பர நகர் பேருந்து நிறுத்தம் அருகில் நடைபெறவுள்ளது.

எனவே இந்நிகழ்ச்சியில் தூத்துக்குடி வடக்கு மாவட்டத் திற்குட்பட்ட மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, கிளை மற்றும் அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், சிறப்பு அழைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் BLA 2, பாக டிஜிட்டல் முகவர்கள் (BDA), BLC, கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## நெல்லை கிழக்கு மாவட்டத்தில்

# ஓரணியில் தமிழ்நாடு மாபெரும் பொதுக்கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் இரா. ஆவுடையப்பன் அறிக்கை!

நெல்லை, ஜூலை 2-

நெல்லை கிழக்கு மாவட்டம் அம்பாசமுத்திரம்,நாங்குநேரி, இராதாபுரம் ஆகிய மூன்று தொகுதிகளின் சார்பில் "ஓரணியில் தமிழ்நாடு" உறுப்பினர் சேர்க்கை குறித்து பொதுக்கூட்டங்கள் இன்று (020725) நடைபெறுகிறது.என நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது.



தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அன்புத்தளபதியார் அவர்கள் அறிவுறுத்தலின்படி இன்று 0207 2025 மாலை 6 மணி அளவில் கீழ்கண்ட பட்டியலில் உள்ளவாறு "ஓரணியில் தமிழ்நாடு" உறுப்பினர் சேர்க்கை குறித்த பொது கூட்டங்கள் நடைபெறுகிறது.

அதன் விவரம் வருமாறு.

1 , அம்பாசமுத்திரம் தொகுதி அம்பாசமுத்திரம் நகரம் இடம் கல்யாணி தியேட்டர் முன்பு, டாக்டர் கலைஞர் திடல். பேச்சாளர்கள் 1.கல்லிடை பேச்சி, 2.அம்பை ராமையா ஆகியோரும். 2.நாங்குநேரி தொகுதி நாங்குநேரி கிழக்கு ஒன்றியம் இலங்குளம் ஊராட்சி பரப்பாடி மெயின் பஜார் பேச்சாளர்கள் 1.கவிஞர் தாமரை பாரதி,2 நெல்லை ரவி ஆகியோரும். 3. இராதாபுரம் தொகுதி இடம் பணகுடி பேரூர் தெற்கு மாட வீதி பேச்சாளர்கள் 1.நெல்லை மணி, 2.பனி பாஸ்கர் ஆகியோரும் பங்கேற்று உரையாற்றுகின்றனர்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## இராமநாதபுரம் மாவட்டத்தில்

# ஓரணியில் தமிழ்நாடு மாபெரும் பொதுக்கூட்டம்!

### காதர் பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. அறிக்கை!

இராமநாதபுரம், ஜூலை 2-

இராமநாதபுரம் மாவட்டக் கழக செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. அறிக்கை வருமாறு:-



கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மண்டல பொறுப்பாளர் நிதி மற்றும் சுற்றுசூழல் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம்தென்னரசு, அறிவுரையின்படி, ஓரணியில் தமிழ்நாடு மாபெரும் பொதுக்கூட்டம் இன்று ஜூலை 2, புதன் கிழமை,மாலை 5.00 மணியளவில், பரமக்குடி நகராட்சி, காந்தி சிலை அருகில் நடைபெற உள்ளது. இப்பொதுக்கூட்டத்தில் வனம் மற்றும் கதர் துறை அமைச்சர், கழக தேர்தல் பணிக் குழு தலைவர் ஆர். எஸ்.இராஜகண்ணப்பன், மாவட்டக் கழக பொருளாளர், பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், தலைமை கழகத்தால் நியமிக்கப்பட்ட தொகுதி பார்வையாளர்கள் மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் கொடி சந்திரசேகர் பரமக்குடி தொகுதி பார்வை யாளர், மாநில சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் அருண் திருவாடனை தொகுதி பார்வையாளர் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் மருத்துவர் எஸ்.சுதர்சன் இராமநாதபுரம் தொகுதி பார்வையாளர். விருதுநகர் தெற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வேல்முருகன் முதுகுளத்தூர் தொகுதி பார்வையாளர் ஆகியோர் கலந்து கொள்ள இருக்கிறார்கள். மேலும் இப்பொதுக்கூட்டத்தில் இளம்பேச்சாளர்கள் செல்வி. காயத்ரி, செல்வன். முகமது அஸ்மத் அவர்களும் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகின்றனர். ஆகவே இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள். கிளைக் கழக, வார்டு கழக செயலாளர்கள், பிரதிநிதிகள், வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), வாக்கு சாவடி அளவிலான (Booth Level Digital Agent) BDA தோழர்கள் அனைவரும் தவறாது கேட்டுக்கொள்கிறேன். உள்ளிட்ட கழக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



இராமநாதபுரம் கடந்த மூன்று தினங்களுக்கு முன்பு (28.06.2025) கடலுக்கு மீன் பிடிக்க சென்ற இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்குப்பட்ட ராமேஸ்வரத்தை சேர்ந்த ஜேசு என்பவரின் படகு இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு அதில் பயணம் செய்த 8மீனவர்களும் இலங்கை சிறையில் அடைக்கப்பட்டனர். இந்த சம்பவம் அறிந்த உடனே சிறைப்பிடிக்கப்பட்ட மீனவர்களையும் படகுகளையும் விடுதலை செய்ய வேண்டுமென ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு தமிழ்நாடு முதல்வர் கடிதம் எழுதினார் . ஒவ்வொரு நாளும் துயரங்களின் கண்ணீரில் வாழுகிற மீனவ சமூகத்தில் அவர்களின் துயரங்களில் அரணாக நின்று அவர்களின் வாழ்வாதரத்திற்கு துணை நிற்கும் இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் இராமநாதபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நேரில் சென்று தனது சொந்த நிதியளித்து ஆறுதல் தெரிவித்தார் .இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள் மீனவ பிரதிநிதிகள் மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் பங்கேற்றனர்.



மதுரை மாநகராட்சி 58வது வார்டுக்கு உட்பட்ட மேலப்பொன்னகரம் 10வது தெருவில் புதிதாக பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுவிழா கவுன்சிலர், மாமன்ற குழுத்தலைவர் மா.ஜெயராம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. உடன் வட்ட செயலாளர் ராஜா, ரமேஷ், விஜயகுமார் , மீனாட்சி சுந்தரம்,சக்திதேவி மற்றும் கழக உடன்பிறப்புகள், மாநகராட்சி அதிகாரிகள் உடன் இருந்தனர்.



மதுரை வடக்கு மாவட்டம் மேற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சம்மட்டிபுரம் பகுதி 63வது வட்ட திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த தினத்தை முன்னிட்டு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, வட்டச் செயலாளர் ஜீன்ஸ் சிவா என்ற சிவக்குமார் ஏற்பாட்டில் 2500 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிய போது எடுத்த படம். உடன் கழக நிர்வாகிகள் தவமணி, கே. தன செல்வம், சோமசுந்தர பாண்டியன், சரவண புவனேஸ்வரி, ஆர்.கணேசன், சசி தேவா, வீர.கணேசன், அழகர், மீனாட்சி சுந்தரம், தமிழரசன், ராஜலட்சுமி, ஆசை தம்பி, காளீஸ்வரி, மணிபாரதி மற்றும் திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், பொதுமக்கள் பங்கேற்றனர்



தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி கருங்குளம் ஒன்றியம் சவலாப்பெரியில் மத்திய கூட்டுறவு வங்கி கிளை துவக்க விழாவை மீன் வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன், ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி. சண்முகையா துவக்கி வைத்தார் உடன் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ். உமரிசங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், முன்னாள் யூனியன் சேர்மன் ரமேஷ், கருங்குளம் ஒன்றிய செயலாளர் சுரேஷ் காந்தி, மகாராஜன், ஒட்டப்பிடாரம் இளைஞரணி அமைப்பாளர் தங்கதுறை பாண்டியன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



திருச்செந்தூர் வட்டம் உடன்குடி பேரூர் பேருந்து நிலையத்தில் உடன்குடி பெரியதாழை வழித்தடத்தில் புதிய பேருந்தினை மீன் வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், மாவட்ட ஆட்சியர் இளம்பகவத் இயக்கி வைத்தார்கள். உடன் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ். உமரி சங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், பேரூர் கழக செயலாளர் மால் ராஜேஷ், ஒன்றிய செயலாளர்கள் பரமன்குறிச்சி இளங்கோ, டி.பி.பாலசிங், திருச்செந்தூர் ஒன்றிய செயலாளர் ஏ.பி. ரமேஷ், நகரச் செயலாளர் வாள் சுடலை மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் வட்டம் புன்னக் காயல் ஆழ்வை கிழக்கு ஒன்றியத்தில் துணை சுகாதார நிலையத்தினை மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் துவக்கி வைத்தார் உடன் மாவட்ட ஆட்சியர் இளம்பகவத், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ். உமரிசங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், ஒன்றிய செயலாளர் சதீஷ்குமார், சோபியா மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தென்காசி தெற்கு மாவட்டம், ஆலங்குளம் சட்டமன்ற தொகுதியில் ஓரணியில் தமிழ்நாடு கழக உறுப்பினர் சேர்க்கைக்கான BDA வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்களுக்கான பயிற்சி முகாம், மாவட்ட கழக பொறுப்பாளர் ஜெயபாலன் தலைமையில் நடைபெற்றது. இந்த முகாமில் ஆலங்குளம் தொகுதி பார்வையாளர் கணேஷ்குமார் ஆதித்தன்,தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி பார்வையாளர் இராமேஸ்வரம் நரேஷ் குமார் ஆகியோர் BDA வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்களிடம் 'ஓரணியில் தமிழ்நாடு' முன்னெடுப்பின் மூலம் கழக உறுப்பினர் சேர்க்கைப் பணிகள் குறித்து எடுத்துரைத்தனர். இதில் அனைத்து கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.